முச்சந்தி முரளி




'உப்பிடி எத்தினை சத்தியத்தை நாங்கள் கண்டு கடந்திட்டம் எண்டு மறந்திட்டினம் போல"


Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | கதிர் : 262

புதன்கிழமை 14 ஒகஸ்ட் 2024

ஆடி 29 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை


இளம்தாய் சிந்துஜாவின் சாவு;

# நான்கு பேர் நேற்றுமுதல் தற்காலிகப் பணி நீக்கம்!

குற்றப்பத்திரம் இன்று கையளிப்பு

## பிரதான சந்தேகநபரான மருத்துவர் தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சே இறுதி முடிவு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 14

மன்னார் மருத்துவமனையில் இளம் தாயான சிந்துஜா உயிரிழந்த விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பப் புலனாய்வு விசாரணையின் அடிப்படையில், தாதிய உத்தியோகத்தர்கள் இருவரும், மருத்துவ மாதுக்கள் இருவரும் நேற்றுமுதல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் இன்று கையளிக்கப் படவுள்ளன.


15


## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 14

தாய்மாமனின் உயிரிழப்பையடுத்து மன அழுத்தத்தில் இருந்த இளைஞர் தவறான முடிவெடுத்து தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

சிந்துஜாவின் உயிரிழப்பு

## குற்றம்செய்த மருத்துவக் குழாம் உடன் தண்டிக்கப்படல் வேண்டும்

மருத்துவர் செந்தூரன் உணவுத்தவிர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், உயிரிழந்த இளம் தாயான சிந்துஜாவின் இறப்புக்கு நீதிகோரியும், இதற்குக் காரணமானவர்களைக் கைதுசெய்து தண்டிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் மருத்துவ கலாநிதி செந்தூரன் உணவுத்


15




## சார்பு வேட்பாளர்களாகவே சுயேச்சை வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் 'சார்பு' வேட்பாளர்களாக பல சுயேச்சை வேட்பாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குற்றஞ்சாட்டி


15


## அநுரவின் பரப்புரை ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 14

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் பிரதான தேர்தல் பரப்புரைக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி


15


## ஜனாதிபதி ரணிலுக்கு நிபந்தனையற்ற ஆதரவு

ராஜித நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்


15


## தருமபுரத்தில் வெடிபொருள்

கிளிநொச்சி, ஓக. 14

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணாத்தி ஆறு எனும் பகுதியிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. வெடிபொருள்கள் இருப்பதை அவதானித்த பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளை


15




## அதிகாரப்பகிர்வின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு

சஜித்திடம் இடதுசாரி முன்னணி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 14

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு ஊடாக தீர்வுகாணப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடம் ஜனநாயக இடதுசாரி முன்னணியினர் வலியுறுத்தியுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதித்


15


## வாடிக்கு தீவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

இளவாலை - சேந்தான்குளம் பகுதியில் மீனவரொருவருடைய வாடிக்கும் படகு வெளியிணைப்பு இயந்திரம் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களுக்கும் நேற்று இரவு தீவைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலை பொலிஸார் இது


15


ஜனாதிபதியாக வந்தால்

## தீர்வு நிச்சயம் இது சத்தியம்

தமிழ்க் கட்சிகளின் ஆதரவை நேற்றுக் கோரினார் சஜித்

கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், தமிழர்களுக்கு நிச்சயம் தீர்வை வழங்கியே தீருவேன் என்று பிரதான எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் தெரிவித்தார்.


15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச்சீட்டு அச்சிடல் பலப்படுத்தப்படும் பாதுகாப்பு

**கொழும்பு ஓக.14**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அரச அச்சகத் திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழி நடத்தப்பட்ட ஆரம்பகட்ட அச்சிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஓகஸ்ட் 15ஆம் திகதிக்குப் பின்னர் வாக்குச்சீட்டுகள் அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அரச அச்சகர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## வாக்காளரை குழப்பாதீர்கள்!

*அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஓக.14

தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்படும் கருத்துகள் மற்றும் தகவல்கள் பொதுமக்களின் குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்கள் ஆணைக்குழுவால் விருப்பு வாக்கு அளிப்பதெனில் 1,2,3 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தலாம் எனவும், இல்லாவிடின் முதலாவதாக வாக்களிக்க விரும்பும் வேட்பாளருக்கு நேரோகப் புள்ளடி இட்டு, இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பு வாக்கை 2,3 என இலக்கமிட்டு அடையாளப்படுத்தலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித்தேர்தல் சட்டத்தின் பிரகாரம் விருப்பு வாக்கு இடுவதெனின் 'புள்ளடி' குறியீட்டைப் பயன்படுத்தக்கூடாது. மாறாக 1,2,3 என்ற இலக்கங்களே பயன்படுத்தப்படவேண்டும் என அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

தேர்தலில் வாக்களிப்பது தொடர்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வரைபடத்திலும் புள்ளடி மற்றும் இலக்கங்கள் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி வாக்களித்தால், அது செல்லுபடியற்ற வாக்காகக் கருதப்படும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## திலித் ஜயவீர கட்டுப்பணம்

கொழும்பு, ஓக.14

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான சர்வஜன சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக திலித் ஜயவீரவுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான தொழிற்சங்கத்தின் குழுவினர் இதில் கலந்துகொண்டனர். 'சர்வஜன சக்தி' கட்சியின் செயற்குழு உறுப்பினர் எம்.பி. விமல் வீரவன்ஸ திலித் ஜயவீரவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருந்தார். (ச-இ)

## பிரிந்தவர்கள் இணைவு
# கைகோர்க்கும் சஜித் - சம்பிக்க



கொழும்பு, ஓக.14

ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளார்.

அதற்கான உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பிக்க ரணவக்க, பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து போட்டியிட்டார். அதுமட்டுமல்லாமல் சஜித் பிரேமதாஸவை கடுமையாக விமர்சித்து ஐக்கிய குடியரசு முன்னணியை உருவாக்கினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைக் கடுமையாக விமர்சித்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, சந்தர்ப்பம் கிடைத்தால் தானும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-44)

## தேர்தல் சட்டம் மீறல் ரணில் மீது முறையீடு

கொழும்பு, ஓக.14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் சட்டங்களை மீறுவதாக தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மதுபான விற்பனை நிலைய அனுமதிப்பத்திரதாரிகளின் சங்கத்தால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் உயர் நீதிமன்றின் உத்தரவினையும் மீறி புதிய மதுபான விற்பனை நிலைய உரிமங்களை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் புதிதாக ஆறு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய ஜனாதிபதி நிதியமைச்சராகவும் கடமையாற்றி வருவதால் அவரே மதுவரித் திணைக்களத்தின் பிரதானியுமாவார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## சொத்து விவரங்கள் வழங்காத 20 பேர்



கொழும்பு, ஓக. 14

குறைந்தபட்சம் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்து மற்றும் உடைமைகள் விவரங்களை சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் ஒருமுறை நினைவூட்டுமாறு நாடாளுமன்றத் தலைவர்களுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

169 உறுப்பினர்களில் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் ஜீன் 30ஆம் திகதிக்குள் தங்கள் சொத்து விவரங்களை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

இதுவரை கடமைகளை நிறைவேற்றாத இந்த 20நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான நிலைமையை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தர்மரத்ன தேரர் சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, ஓக.14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்குவதாக மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் பிரதம பீடாதிபதி வலஹகுணவெவ தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் நமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற நிபந்தனையுடன் தான் இந்த ஆதரவு வழங்குகின்றோம்.

இந்தத் தலைவருக்கு அதிகாரத்தைக் கொடுத்து அவரைப் பணிபுரிய வைப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## ராஜபக்சக்களை வீழ்த்தி தக்கபாடம் புகட்டுவோம்

கொழும்பு, ஓக. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவை தோற்கடித்து ராஜபக்சக்களுக்கு தக்க பாடம் புகட்டுவோம் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்ச உள்ளிட்டவர்களே நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தனர். நீதிமன்றத் தீர்ப்பு ஊடாகவும் இது உறுதியானது. வரிசை யுகம் நிலைமைகளுக்கு ராஜபக்சக்கள் அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும்.

மொட்டுச் சின்னத்தில் களமிறங்கும் நாமலை படுதோல்வி அடைய செய்து கற்றுக்கொள்ளாத பாடத்தை அவர்களுக்கு கற்பிப்போம்- என்றார். (ச-44)

# ராஜபக்சக்களுக்கு மீண்டும் இடமில்லை

## ஐ. தே. க. தெரிவிப்பு

கொழும்பு, ஓக 14

ராஜபக்சக்கள் வேண்டாம் எனக் கோரியே மக்கள் போராட்டம் வெடித்தது. மாறாக போராட்டக்காரர்கள் நாமல் ராஜபக்சவை கோரவில்லை - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பத்துக்கு இந்நாட்டில் மீண்டும் இடமில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டனர். எனவே, நாமல் ராஜபக்சவால் வெற்றிபெறமுடியாது. சம்பிக்க ரணவக்க, ஹக்கீம் மற்றும் ரிஷாத் போன்றவர்கள் கடந்தமுறை [illegible] சஜித்துடன் இருந்தனர். ஆனால் சஜித் தோற்றார். இம்முறையும் பிரதமர் பதவியை வழங்குவேன் என ஆசைக்காட்டி சம்பிக்கவின் ஆதரவை பெறுவதற்கு சஜித் முற்படலாம் - என்றார். (ச-25, 44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யானைகள் தின விழிப்புணர்வு நிகழ்வு

கிளிநொச்சி, ஓக.14

கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் சர்வதேச யானைகள் தினத்தை முன்னிட்டு 'யானைகளை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு பாடசாலை முதல்வர் தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிவசங்கர் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் M.சசிகரன்சிறப்பு விருந்தினராகவும், சுற்றுச்சூழல் அதிகாரசபை உத்தியோகத்தர் எஸ். லதீஸ்குமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாடசாலையின் அனைத்து வகுப்பு மாணவர்களும் யானைபோல் வேடம் அணிந்து விழிப்புணர்வை ஏற்படுத்தியும், உலக யானை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-25,113,159,20, 27,100)

# அதிகவிலையில் பாண்; கடும் நடவடிக்கை

### மன்னார் மாவட்டச் செயலர் எச்சரிக்கை

மன்னார், ஓக. 14

ஏனைய மாவட்டங்களை விடவும் மன்னார் மாவட்டத்தில் பாண் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது. எனவே நியாயமான விலையில் வெதுப்பக உரிமையாளர்கள் பாணை விற்பனை செய்யவேண்டும் என மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

மன்னார் வெதுப்பக உரிமையாளர்களுடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஏனைய மாவட்டங்களில் ஒரு இறாத்தல் பாணின் விலை 130 ரூபா தொடக்கம் 140 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வரும் அதேநேரம் மன்னாரில் 160 ரூபா தொடக்கம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது. எனவே பாண் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றதா என கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு 0232222235 மூலம் தொடர்பு கொண்டோ அல்லது நேரடியாகவோ முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25,60)




### கலாசார ஆடைகட்டி கந்தனைத் தொழுவோம்

கலாசார ஆடைகட்டி கந்தனைத்
தொழுவோம் வாரீர்
கலியுகவரதனை காவலனை
தொழுவோம் வாரீர்
உலாவரும் போதெல்லாம் அவன் புகழ் பேசுவோம்
ஒளி ஞான வேலவனை நாளும்
துதிப்போம் வாரீர்
நிலவிடும் துயரதை நிறுத்தென்று
கேட்போம் வாரீர்
நிரந்தரத் தீர்வதனை தாவென்று
கேட்போம் வாரீர்
அழகான தமிழ் நல்லைப்
பதிக்கு வாரீர்
அனைவரும் கலாசார ஆடைகட்டித்
தொழுவோம் வாரீர்

■ மதுரகவி

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.14

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சொற்பொழிவுத் தொடர் 18 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர், பிரசங்க வாரிதி ச. நவநீதன் 'மாணிக்கவாசகரும் குயிற் பத்தும்' எனும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

## பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் அமரர் சரஸ்வதி பொன்னம்பலம் முதலாவது நிதிய பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் இன்று புதன்கிழமை பி.ப 1 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஆலோசகர் எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் போதனா மருத்துவமனை களுத்துறை மருத்துவ கலாநிதி க.காண்டீபன் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமி மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (45-159)



வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் மூன்றாம் நாள் உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட விசேட வாகனத்தில் விநாயகர் எழுந்தருளி வெளிவீதி உலா வந்தார். இதன்போது பொம்மலாட்டம் , தவில் மற்றும் நாதஸ்வர கச்சேரி என்பன இடம்பெற்றன. (ச-25, 100)

# நல்லூர்த் திருவிழாவின் 6ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.14

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. 6ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவஸ்ரீ சோ. கேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக மேனாட் துணைவேந்தர் வாழ்நாள் பேரோசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு அதிதியாக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். நவாலி முருகானந்தா அறநெறிப் பாடசாலை, கட்டுடை அரசடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ நாகராஜ ராஜேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை, இந்து ஆகம நவீன கலை கலாசார அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விஷேட நிகழ்வாக லாஸ்யமதி கலைமன்றம் வழங்கும் நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ரி)

## பருத்தித்துறையில் பெண் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.14

வரி செலுத்தப்படாது நாட்டுக்கு கடத்திவரப்பட்ட சிகரெட்டுகளை விற்பனை செய்த பெண் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் பருத்தித்துறையில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். 240 சிகரெட்டுகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைக்காக சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-45-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 14

சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் சைவசமய குரவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை நிகழ்வு சைவபரிபாலனசபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில், யாழ்.நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலனசபை ஆச்சிரம மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன், சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ தி.மயூரகிரிக் குருக்கள், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25- 66)

## பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.14

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 6 ஆம் நாள் நிகழ்வான கந்தரோடை ஓம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை இடம்பெறவுள்ளது. (ச-25)

## நீச்சல் போட்டிகள்

முல்லைத்தீவு, ஓக.14

ஐக்கிய விளையாட்டுக் கழக ஒழுங்கு படுத்தலில் குமுழமுனை கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோவில் ஆலய நீர்த்தடாகக் கேணியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நீச்சல் போட்டிகள் நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட வீர,வீராங்கனைகள் போட்டியில் பங்குபற்றலாம்.

மேலதிக தகவல்களை ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் சுதாலதனிடயிம் 0770898781, 0774652323 இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-45-13)

## வெள்ளோட்ட விழா

கிளிநொச்சி, ஓக.14

வட்டக்கச்சி அருள்மிகு ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-45)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.14

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப் புச்சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்கள் ஆசியுரையையும், பரிபாலன சபைத் தலைவர் சி.தயாநாதன் தலைமையுரையையும் ஆற்றுவர். சைவப்புலவர், பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் 'கேட்ட வரம் அருவாள் அம்பிகை' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச - 25)

## மஹோற்சவம்

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12நாள்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 28ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ரி)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். வரணி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரியின் தலைவர் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளதுஎன செயலாளர்து. இளங்குமரன் அறிவித்துள்ளார். (ச-25,159)

## சிறார்களின் மங்கல இசை

யாழ்ப்பாணம், ஓக.14

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இளம்வயது நாதஸ்வரக் கலைஞர்களின் சிறப்பு மங்கல இசை நிகழ்வு துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்புற கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. (ச-25- 66)




## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மகாலட்சுமியை வழிபட நல்ல திருப்பம் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மன வருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். நன்மைகள் அதிகரிக்கும்.தட்சிணாமூர்த்தியை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகளில் திட்டமிடுதல் அவசியம். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**விருச்சிகம்:** புதியமுயற்சிகளில்ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். மகிழ்ச்சி அடைவீர்கள். நல்ல திருப்பம் ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். சகோதர வகையில் நன்மை ஏற்படும். மறைமுகத் தொல்லைகள் ஏற்படும். இடையூறுகள் விலகும்.

**மீனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவக் குற்றங்களுக்கு மன்னிப்பு வேண்டாம்!

## நீதிகோரி மன்னாரில் கறுப்புக்கொடி போராட்டம்

**மன்னார், ஓக. 14**

**மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உயிரிழந்த சிந்துஜாவுக்கு நீதி கோரி நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் மாவட்ட பொது அமைப்புகள் இணைந்து கறுப்புத் துணியால் தமது வாயைக் கட்டி கையில் கறுப்புக் கொடியை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவமனைப் பணியாளர்களின் அசமந்த போக்கு காரணமாக உயிரிழந்த சிந்துஜா மரியராஜின் மரணம் தொடர்பான விசாரணைகளில் எந்தவித நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை.

மருத்துவமனையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இறந்தவருக்கு நீதி வேண்டும்.

இவ்வாறான சம்பவம் இனி நடைபெறக்கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் பெண்கள் அமைப்புகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட் தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-56-60)

# விபத்தில் மூவர் பலி

கொழும்பு, ஓக.14

கேகாலை, வேவல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக கண்டியில் இருந்து வந்த குடும்பமே விபத்தில் சிக்கியுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் முச்சக்கரவண்டி மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# 'பேஸ்புக்' மோசடி மக்களே உஷார்!

கொழும்பு, ஓக.14

பேஸ்புக் ஆதரவுக் குழுக்களைப் போன்று பாவனைசெய்து மக்களின் தனிப்பட்ட தகவல்களைத் திருடும் மோசடி ஒன்று இடம்பெற்று வருவதாக இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு எச்சரித்துள்ளது. பேஸ்புக் ஆதரவுக் குழுக்களாகக் காட்டிக்கொண்டு வட்ஸ்அப் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்புவதன் மூலம் இந்த மோசடி மேற்கொள்ளப்படுகிறது. உங்கள் பேஸ்புக் பக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டால் அல்லது செயலிழக்கச் செய்யப்பட்டால், பேஸ்புக் பயனர்கள் வட்ஸ்அப் மூலம் வரும் எந்தச் செய்திகளுக்கும் பதிலளிக்க அல்லது உங்கள் தகவலை வெளியிடவேண்டாம். வர்த்தக முகநூல் கணக்கு வைத்திருப்பவர்களை இலக்கு வைத்து இந்த மோசடி இடம்பெற்று வருவதாக இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# மழைக்கு வாய்ப்பு

வடக்கு, மேல், சப்ரகமுவ, மத்திய, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களின் சில பகுதிகளில் பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையை அண்மித்துள்ள தாழ்வான வளிமண்டலத்தின் கொந்தளிப்பான தன்மை காரணமாக நாடு முழுவதும் தற்போது காணப்படும் மழை நிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# தடுப்பூசிக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஓக.14

நாட்டின் மருத்துவமனை அமைப்பில் அத்தியாவசிய தடுப்பூசிகளின் இருப்பு தீர்ந்துவிட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஜி.ஜி. சமல் சஞ்சீவ தெரிவிக்கையில், மயக்கமடைந்த பின்னர் சுயநினைவை மீட்டெடுக்கும் நியோஸ்டிக்மைன் தடுப்பூசி மருந்து அநேகமான மருத்துவமனைகளுக்கு கிடைக்கப்பெறவில்லை. மயக்க நிலையடைய பயன்படுத்தப்படும் லிக்னோகைன் தடுப்பூசி மற்றும் மஞ்சள் காமாலையைத் தடுக்க நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஹெபடைடிஸ்பி தடுப்பூசிக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பலஸ்தீனத் தூதுவர் அநுரகுமார சந்திப்பு



கொழும்பு, ஓக.14

இலங்கைக்கான பலஸ்தீனத்தின் தூதுவர் கலாநிதி சுஹய்ர் ஷயிட்க்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. பலஸ்தீனத்தில் காஸாவில் இடம்பெற்று வருகின்ற மனிதாபிமானமற்ற படுகொலைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியதற்காகவும் பலஸ்தீனத்துக்காக ஒத்துழைப்பு வழங்கியதற்காகவும் இதன்போது அவர் நன்றி தெரிவித்தார். (ச-இ)

# தினம் தெரியுமோ?

**இ**ந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில கடும் போட்டி எண்டது எல்லாருக்குமே வடிவாத் தெரியும். அதால எலக்சனில நிக்கிறவை எங்கையெல்லாம் வாக்குகள் கிடைக்குமோ அதுகளை மிஸ் பண்ணாமல் தங்கடபக்கம் விழவைக்கோணுமெண்டு படாதபாடு படுகினம். முந்தியெல்லாம் ஆரும் ரண்டு பேருக்குள்ளதான் போட்டி இருக்கும். மற்றவையெல்லாம் 'நாங்களும் எலக்சன் கேட்டம்' எண்டு விலாசம் காட்டுறதுக்காக ஒப்புக்குச் சப்பாணியாத்தான் போட்டி போடுறவை. ஆனால் இந்தமுறை எல்லாமே தலைகீழ். சஜித், ரணில், அநுர, நாமல் எண்டு நாலுமுனைப்போட்டி. ஆருக்கு வாக்குப் போடுறதெண்டு சனத்துக்கே கடும் குழப்பம்தான் வரப்போகுது. அதால சிங்களச் சனத்தை மட்டும் நம்பிக்கொண்டிருக்காமல், தமிழ், முஸ்லிம் சனத்தின்ர வாக்குகளையும் ஒவ்வொண்டா எண்டாலும் பொறுக்கோணும் எண்டு எல்லாரும் குத்திமுறியினம்.

எண்டாலும் அரசனை நம்பி புருசனைக் கைவிடக்கூடாதெண்டதிலையும் சிங்கள வேட்பாளர்மார் கவனமாத்தான் இருக்கினம். அதாலதான் இப்ப பகிரங்கமா ஒரு வாக்குறுதியும் குடுக்காமல் தனித்தனியா ஆக்களைக் கூப்பிட்டுக் கதைக்கினம். அதிலையும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்காண்டி உருவான கட்டமைப்புக்காரரை தனித்தனியாப் பிரிச்சு தங்கடபக்கம் வளைக்கிறதுக்கும் ஏற்பாடுகள் நடக்குது. அதின்ர ஒரு கட்டம்தான், கட்டமைப்பில இருக்கிற கட்சியளை ரணிலார் முதல்நாளும், சஜித்தார் அடுத்தநாளும் தனியக் கூப்பிட்டு 'டீல்' பேசியிருக்கினம். எந்தப் பக்கம் 'டீல்' படியுதோ அந்தப்பக்கம் சப்போர்ட் பண்ணுவம் எண்டதுதான் கட்டமைப்பில இருக்கிற கட்சிக்காரரின்ர திட்டம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுறதில உந்தக் கட்சிக்காரர் கெட்டிக்காரர்.

உந்தக் கட்சிக்காரரின்ர மதில்மேல் பூனைத்தனம் தெரிஞ்சுதான், கட்டமைப்பில சேர்க்கேக்க சிவில் சமூகக்காரர் சைன் எல்லாம் வாங்கினவை. ஆனால் இப்பிடி எத்தினை ஒப்பந்தங்களை அந்தக் கட்சிக்காரர் கண்டிருப்பினம். சைன் வைச்ச சூடு ஆறமுதலே ரணிலார் எப்ப கூப்பிடுவார், சஜித் எப்ப சாப்பாடு போடுவார் எண்டு காத்துக்கொண்டிருந்த மாதிரி ஓடிப்போய் சந்திச்சு, டீல் பேசிப்போட்டு, 'ரணில் சமஷ்டி தர ஓமாம், சஜித் 13க்கும் அங்காலபோக ரெடியாம்' எண்டு கதை வேற. எங்களைச் சிங்களவர் ஏமாத்தினதை விடவும் எங்கட ஆக்கள் ஏமாத்தினதுதான் கூட. இப்பிடி ஏமாத்துறது கட்சியளுக்கும், ஏமாறுறது எங்கட சனத்துக்கும் பழக்கமாப் போட்டுது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வரணி சிட்டிவேரம் அம்மன் அறநெறி மாணவர்களின் தெய்வீக திருக்கூட்ட இசைச்சமர்ப்பணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த இசைச் சமர்ப்பணத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ச-25-159)



யாழ். பல்கலைக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
மருத்துவ முகாமில் மருத்துவர் பேரானந்தராஜா உள்ளிட்ட மருத்துவ குழாமினர் உரிய மருத்துவ ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கினர். (ச-25)





## மனக்கணிதப் போட்டியில் மன்னார் மாணவர்கள் சாதனை

கொழும்பு, ஓக 14
'யூசி மாஸ்' நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மனக் கணிதப் போட்டியில் மன்னார் 'யூசி மாஸ்' கல்வி நிலையம் சார்பில் பங்குபற்றிய மாணவர்கள் அதிகளவு வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை மாணவன் வின்சன்ட் செஷான் ஜெத்னியேல் கேட்டல் மற்றும் காட்சி ஆகிய இரு பிரிவுகளிலும் கிராண்ட் சம்பியன், சம்பியன் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளார்.
லசால் ஆங்கிலப் பாடசாலை மாணவி யக்கேயு றெறா ஜெசாறி சம்பியன் வெற்றிக் கிண்ணத்தையும், தோட்டவெளி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி ரா. ரியானா கிராண்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுள்ளனர்.
அவர்களுடன் சேர்த்து மேலும் 34 மாணவர்கள் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர். (ச-25- 56)

## பஸ்சேவை இன்றி நாச்சிக்குடா மக்கள்

கிளிநொச்சி, ஓக 14
கிளி. மேற்கு இரணைமாதாநகர் நாச்சிக்குடா பிரதேசத்துக்கான பேருந்து சேவையின்றி பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே இந்தப் பகுதிக்கு பஸ்சேவை இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மேற்கில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் முழங்காவில் உப நகரத்தில் நீண்ட நேரம் தரித்து நிற்கின்றன. அதற்குப் பதிலாக அந்தப் பேருந்துகள், இரணைமாதாநகர், நாச்சிக்குடா பாடசாலை, நாச்சிக்குடாச் சந்தி ஆகிய பகுதிகளில் புனரமைக்கப் பட்டுள்ள வீதி வழியாக பயணிக்குமானால் பல குடும்பங்கள் நன்மையடையும்.
இது தொடர்பாக பல பொது அமைப்புகளிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-25-13)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறும் தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்வில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் சா. சுதர்சன் பிரதம அதிதியாக கலந்துசிறப்பித்தார். இதன்போது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-113)

## முருகானந்தாக் கல்லூரியில் விளையாட்டுப் பயிலகம்

கிளிநொச்சி வடக்கு வலய முருகானந்தாக் கல்லூரியில் உள்ளக விளையாட்டுப் பயிலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரி அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கல்லூரியின் உள்ளக விளையாட்டுகளை விருத்தி செய்வதுடன் மாணவர் ஓய்வு நேரங்களைப் பயனுடையதாக்கும் நோக்கில் மாணவர் நாடாளுமன்றத்தால் இந்தப் பயிலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நிகழ்வில் சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் பூ. திருக்குமார் விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-45-13)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாய்ஜாலம் வேண்டாமே!

தேர்தல் நெருங்கும் சமயத்தில் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்களின்பால் திடீர்ப் பரிவு ஏற்பட்டிருக்கின்றது. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின்னர் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் எல்லோரும் பேசி முடிவுக்கு வருவோம் என்று தன்னைச் சந்தித்த தமிழ் அரசியல் தரப்புகளிடம் தெரிவித்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க. ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறுவது முதல் தடவையல்ல என்பதால், தமிழ் மக்கள் அவரது கருத்துகள் தொடர்பாகப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. நல்லாட்சிக் காலத்திலும், அதன்பின்னர் ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்தபின்னும் தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக - அரசியல் தீர்வு தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்திருக்கின்றார். ஆனால் அவை யாவும் காற்றில் பறக்கவிடப்பட்ட வாக்குறுதிகளாகவே இருந்தன. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் செயற்பாடுகள் இம்மியளவுகூட முன்னகரவில்லை.

நாட்டில் பொருளாதார நெருக்கடியின் தொடர்ச்சியாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க தமிழ் மக்களின் ஒத்துழைப்பை, குறிப்பாக புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பைக் கோரியிருந்தார். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தரப்புகள் கோரிக்கை விடுத்த போது, தமிழ் மக்களின் பிரச்சினைகளை முற்றிலுமாக தான் அறிந்தவன் என்றும், அவற்றுக்குத் தீர்வு வழங்குவேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க பாடமெடுத்திருந்ததும் அனைவரும் அறிந்ததுதான். நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியில் இருந்த காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளின் தீர்வுக்காக ரணில் விக்கிரமசிங்க கிஞ்சித்தும் முயற்சி எடுக்கவில்லை. அவர் பதவியில் இருந்தகாலத்தில் தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், வனவளத் திணைக்களம் உள்ளடங்கலாக திணைக்களங்களின் ஆக்கிரமிப்பு என்பன அரச ஆதரவுடன் - வேகத்துடன் முன்னெடுக்கப்பட்டன. தமிழ்த் தலைமைகள் அவை தொடர்பாக ரணிலின் கவனத்துக்குக் கொண்டுசென்ற போதும், அவற்றைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் - பெரும்பான்மை மக்களின் வாக்குகளுக்காகக் 'கமுக்கமாகவே' இருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் மீண்டும் தமிழ்மக்களின் பிரச்சினைகளில் கரிசனை செலுத்துகின்றார் ரணில் விக்கிரமசிங்க. பதவியில் இருந்தகாலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்காக துளியளவு முயற்சியையேனும் எடுக்காத ரணில் விக்கிரமசிங்க, புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஆராய்வோம் என்று மாயஜாலப் பேச்சுகளை திரும்பவும் அவிழ்த்து விடுகின்றார். தமிழ் மக்களின் வாக்குகளை இலக்குவைத்து இந்த நகர்வுகளை அவர் முன்னெடுக்கின்றார். பல தசாப்தங்களாக சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்த தமிழ் மக்கள், இனியும் ரணில் போன்றோரின் வாய்வார்த்தைகளை நம்பும் நிலைமையில் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்க்கும் ரணில் விக்கிரமசிங்கவும், தெற்கு அரசியல் தலைமைகளும் வார்த்தை ஜாலங்களால் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்ந்துவிட முடியும் என்ற கனவை விடுத்து, தமிழ் மக்கள் மீதான கரிசனையைத் தங்கள் செயற்பாட்டில் காட்டவேண்டும்.




## ஓய்வூதிய உதவித்தொகை நிலுவையுடன் ஒக்ரோபரில்



கொழும்பு ஓக.14

ஓய்வூதியதாரர்களுக்கு அமைச்சரவை அங்கீகரிக்கப்பட்ட 3ஆயிரம் இடைக்கால மாதாந்திர உதவித் தொகையை நிலுவைத் தொகையுடன் ஒக்ரோபரில் வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையில் அமைச்சரவையில் முன்மொழியப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், அரச சேவையில் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் தற்போது வழங்கப்படும் 2ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவுக்கு மேலதிகமாக 3ஆயிரம் ரூபா உயர்த்தப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாத நிலுவைத் தொகையான 3ஆயிரம் ரூபாவுடன் ஒக்ரோபர் மாதம் ஓய்வூதியம் 6ஆயிரம் ரூபாவாக வழங்கப்படும். பின்னர் புதிதாக வழங்கப்படும் இடைக்கால உதவித்தொகை வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## 3 கோடி முட்டைகள் இம்மாதம் இறக்குமதி

கொழும்பு, ஓக. 14

இந்தியாவிலிருந்து இரண்டாவது முறையாக இறக்குமதி செய்யப்படும் 3 கோடி முட்டைகளின் முதல் தொகுதி இந்த மாதம் நாட்டை வந்தடையும் என்று அரச வணிக இதர சட்டபூர்வ நிறுவனம் தெரிவித்துள்ளது. உள்ளூர்ச் சந்தையில் ஒரு முட்டை 50 ரூபாவுக்கு மேல் விற்பனையாகி வருவதால் மீண்டும் முட்டை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக முட்டை இறக்குமதி நிறுத்தப்பட்ட பின்னர் முட்டை வியாபாரிகள் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்து நுகர்வோரை சுரண்டியதாகவும், இதனால் நுகர்வோருக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டதாகவும் அதன் தலைவர் ஆ.சிறிவலிசுந்தர மேலும் தெரிவித்தார். (ச-இ)

## வெற்றிடங்களாக இரு ஆசனங்கள்

ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் நாடாளுமன்ற ஆசனங்கள் தற்போது வெற்றிடமாக உள்ளதாக நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின்கட்சிஉறுப்புரிமையை இரத்துச் செய்தமை சட்டபூர்வமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து இருவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்தும் விலகியிருந்தனர் (ச-இ)

## குடிதண்ணீர் கட்டணம் குறைப்பு

கொழும்பு. ஓக. 14

தற்போதுள்ள குடிதண்ணீர்க் கட்டணத்தை திருத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, வீட்டுப் பாவனைக்கான குடிதண்ணீர் கட்டணத்தை 7 சதவீதத்தாலும், அரசு மருத்துவமனைகளுக்கான குடிதண்ணீர்க் கட்டணத்தை 4.5 சதவீதத்தாலும், பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கான குடிதண்ணீர்க் கட்டணத்தை 6.3 சதவீதத்தாலும் குறைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)



## கட்டுப்பணம் செலுத்தியது மக்கள் போராட்ட முன்னணி

கொழும்பு, ஓக. 14

மக்கள் போராட்டக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி நுவான் போபகேவுக்கான கட்டுப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் தர்மசிறி லங்காபேலி கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். (ச-இ)

## நாளை

15.08.2024

வியாழக்கிழமை - ஆடி - 30

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05

## நாளொரு நல்வார்த்தை

ஞானம் என்பது பள்ளிப்படிப்பில் வருவதல்ல, அதைப் பெறுவதற்கான வாழ்நாள் முயற்சியின் விளைவு அது.

-அல்பேர்ட் ஐன்ஸ்டீன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 100 கோடி நட்டஈடு அரசிடம் கோருகிறார் விமல்

விற்பனைக்கு
குபேட்டா 600 லாண்ட் மாஸ்டர்
2 கலப்பையுடன்.
நிசான் புளூபேட் 32 - XXX கார்.
தொடர்புகளுக்கு:-
077 069 8105
(CS/55923) I-1

கொழும்பு, ஓக.14

**பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்திய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் இருந்து 100 கோடி ரூபா நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.**

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விமல் வீரவன்ஸவாகிய நான் 2015ஆம் ஆண்டு வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தேன்.

அங்கு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் போலிக் கடவுச்சீட்டை நான் பயன்படுத்தினேன் என என்னைக் கைது செய்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் 8 வருடங்களாக இடம்பெற்று வந்த இந்த வழக்கில் கடந்த ஏப்ரல் மாதம், சமர்ப்பித்த கேள்விக்குரிய கடவுச்சீட்டு போலியானதல்ல என்பது நிரூபிக்கப் பட்டதையடுத்து விடுதலை செய்ய உத்தரவிடப் பட்டது.

இதனால் எனது நற்பெயருக்கும் சமூக மரியாதைக்கும் குந்தகம் ஏற்பட்டுள்ளது. பொய்யான மற்றும் தீங்கிழைக்கும் முறைப்பாட்டைச் செய்த அதிகாரிகள் 100 கோடி ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என விமல் வீரவன்ஸ வழக்குப் பதிவு செய்துள்ளார். (ச-இ)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



தோற்றம் : 23.05.1934 மறைவு : 18.07.2024

கடந்த 18.07.2024 அன்று இறைபதமடைந்த
எமது அன்பு அம்மா

### திருமதி யாதவராயர் மனோன்மணி

(வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலை ஓய்வுநிலை ஆசிரியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (15.08.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் (17.08.2024) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

இல: 10 வைத்தியசாலை வீதி
குடியிருப்பு, வவுனியா.

## போன 'மல்லி' திரும்பி வந்தார்

கொழும்பு, ஓக.14

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் அணியில் இணைந்த 'சொக்காமல்லி' என அழைக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்லால் ஜயசேகர மீண்டும் மொட்டுக் கட்சிக்குள் திரும்பியுள்ளார். மொட்டுக் கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவர் பெயரி டப்படாத நிலையிலேயே, ஜனாதிபதியின் கூட்டத்துக்குத் தான் சென்றிருந்தேன் என்றும் தற்போது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் கள மிறங்கி விட்டதால் கட்சியின் வெற்றிக்காக கட்சியுட னேயே பயணம் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25,44)

## இளம் தம்பதி உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஓக.14

காலி, அம்பலாங்கொட, படபொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இளம் தம்பதி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர். 28 வயதுடைய பெண்ணும் 29 வயதுடைய நபரொருவருமே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த தம்பதியின் குழந்தையின் அழுகுரலைக் கேட்ட அயல் வீட்டார்கள் குறித்த வீட்டுக்குள் சென்று பார்த்த போது தம்பதியர் உயிரிழந்திருப்பதைக் கண்டுள்ளனர்.

இதனையடுத்து, அயல் வீட்டார்கள் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். (ச-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 . 07 . 1980



உதிர்வு 28 . 07 . 2023

செல்வி

### சிவப்பிரகாசம் சிவகஜந்தி

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உன்முகம் மறக்கவில்லை
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உன் நினைவுகள் மறைவதில்லை

உன்னோடு கதைபேசி விடிந்த காலைகள் - இன்று
உன்கதை பேசியே முடிந்ததம்மா
கலகல சிரிப்பொலி - இன்றும்
காற்றின் மொழியாய் பேசுதம்மா

நல்லூரான் பவனியாய் வருகிறான்
எம்மோடு சேர்ந்துவர நீயில்லையே...
இறையோடு கலந்த உம்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்....

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

123/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

உருவாய் 02 . 04 . 1947



அருவாய் 13 . 07 . 2024

அமரர்

### இராஜேஸ்வரி செல்வரட்ணம்

திதி: பூர்வபக்க அட்டமி

"ஆண்டு குரோதியின் ஆனிமாதப் பூர்வபக்கம்
தாண்டிடும் அட்டமியே தன்திதியாய் மீண்டாளே
இவ்வுலக வாழ்வை இராசேஸ்வரியன்னை
செவ்வையுடன் சேர்ந்தாள் சிறந்து"
எமது குடும்ப விளக்கின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

பிறவுன் றோட், கொக்குவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலைத் தாக்குவதில் ஈரான் இராணுவம் உறுதி!

**தெஹ்ரோன், ஒக. 14**

**இஸ்ரேல் மீதான தாக்குதலைத் தவிர்க்குமாறு, பிரிட்டன் விடுத்த கோரிக்கையை ஈரான் நிராகரித்துள்ளதுடன், இஸ்ரேலுக்குத் தண்டனை உறுதி என்றும் அறிவித்துள்ளது.**



ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவரான இஸ்மாயின் ஹனியேவின் கொலைக்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது அதிதீவிரமான தாக்குதல்களை நடத்துவதற்கு ஈரான் தயாராகி வருகின்றது. இந்த வாரத்துக்குள் இஸ்ரேல் மீது ஈரான் போர் தொடுப்பது உறுதி என்று வெள்ளை மாளிகையும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் எச்சரித்துள்ளது.

இதனால், போரைத் தவிர்க்குமாறு ஈரானிடம் ஜி-7 நாடுகளும், இதர பல நாடுகளும் மற்றும் அமைப்புகளும் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றன. இவ்வாறாக பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும் இஸ்ரேல் மீதான தாக்குதலைத் தவிர்க்குமாறு கோரிய நிலையிலேயே, பிரிட்டனின் கோரிக்கையை ஈரானின் அதிபர் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

ஆக்கிரமிப்பாளனுக்கு தண்டனை வழங்குவது ஒருதேசத்தின் உரிமை என தெரிவித்துள்ள ஈரான் ஜனாதிபதி மசூட் பெசெஸ்கியான், இவ்வாறான நடவடிக்கையே அப்பாவிகள் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்குத் தீர்வு எனவும் தெரிவித்துள்ளார்.

காஸாவிலும் வேறு பகுதிகளிலும் இஸ்ரேலால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான குற்றங்கள் குறித்த மேற்குலகின் மௌனம் பொறுப்புணர்வற்றது. இன்று ஈரானை சமரசம் செய்ய துடிக்கும் மேற்கு நாடுகளும் ஜி-7 கூட்டணியும், காஸா மீதான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையில் கள்ளமௌனம் காப்பது ஏன்? என்றும் ஈரான் ஜனாதிபதி மசூட் பெசெஸ்கியான் பிரிட்டன் பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

## ஒலிம்பிக் தொடரை நடத்த இந்தியாவுக்கு தகுதியுண்டு

பிரான்ஸ் ஜனாதிபதி பெருமிதம்



ஒலிம்பிக் தொடரை சிறப்பாக நடத்தும் திறனை இந்தியா கொண்டுள்ளது என்று பிரான்ஸின் அதிபர் இம்மானுவல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்தும் வகையில் இந்தியா தற்போதிருந்தே காய்களை நகர்த்திவரும் நிலையிலேயே, "ஒலிம்பிக் தொடரை நடத்தும் வல்லமையை இந்தியா கொண்டுள்ளது" என்று பிரான்ஸின் அதிபர் மக்ரோன் வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா மீது நான் வலுவான நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்தியாவால் என்ன செய்ய முடியும் என்பது தொடர்பிலும், அத்தகைய நிகழ்வுகளை நடத்தும் திறன் குறித்தும் நான் அறிவேன். எதிர்வரும் நாட்களில் நிச்சயம் அந்த சாத்தியம் உள்ளது. இதை ஒருங்கிணைத்து நடத்துவது சவாலான காரியம். ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் அமெரிக்காவுடன் போட்டியிட்டு இந்த வாய்ப்பை பெற்றோம்.

நாங்கள் இந்தியாவுடன் பணியாற்ற ஆர்வமாக உள்ளோம். தொழில்நுட்பக் குழுவினரை அனுப்புமாறு பிரதமர் மோடி என்னிடம் கேட்டுக் கொண்டார். மேலும், பரிஸ் ஒலிம்பிக் சார்ந்த ஏற்பாடுகளில் இந்தியர்கள் சிலரும் எங்கள் அணிகளுடன் இருந்தனர். மூன்றாவதாக இதில் எங்களுடன் நிறைய நிறுவனங்கள் இணைந்து பணியாற்றின. அந்த நிறுவனங்கள் லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கிலும் பங்கேற்கின்றன. பிரிஸ்பெய்னுக்கும் செல்கின்றன. அந்த நிறுவனங்கள் இந்தியாவில் நடைபெறும் ஒலிம்பிக்கில் அங்கம் வகித்தால் நான் மகிழ்ச்சி கொள்வேன் என்றார். (ம)

## ஷேக் ஹசீனா பதவிவிலகலில் அமெரிக்காவுக்குப் பங்கில்லை!

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகியமையிலும், பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் கலவரங்களிலும் அமெரிக்கா எந்தத் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. (ம)

பரதநாட்டிய அரங்கேற்ற அழைப்பு



பிரான்ஸ் கலாலயம் கலைக்கல்லூரி அதிபர் "பரதசூடாமணி" திருமதி கௌசலா ஆனந்தராஜா அவர்களின் மாணவியும் திரு.திருமதி. கேதீஸ்வரன் கமலேஸ்வரி அவர்களின் புதல்வியுமான

செல்வி.கேதீஸ்வரன் கவிகா

அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் குரோதி வருடம் ஆடி மாதம் 30ஆம் நாள் (15.08.2024) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற இருப்பதால், இவ் விழாவிற்கு வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர் : கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன்
சிறப்பு விருந்தினர் : கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்

"ராஜா கிறீம் ஹவுஸ்" சரஸ்வதி மண்டபம் ஹம்சியா மஹால்
(இல.37, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.)

திரு.திருமதி கேதீஸ்வரன் கமலேஸ்வரி குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
077 668 4302
077 431 3448
076 273 5374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா விசாவில் வரும் யாசகர்கள்

## தடுக்குமாறு சவூதியிடம் பாகிஸ்தான் கோரிக்கை

பாகிஸ்தான் பிசைக்காரர்கள் சுற்றுலா விசாவில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச்சென்று பிச்சை எடுத்து வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுற்றுலா விசாவில் பிச்சைக்காரர்களை சவூதி அரேபியாவுக்கு அனுப்ப வேண்டா மென பாகிஸ்தானிடம் சவூதி அரேபியா கோரிக்கை விடுத்துள்ளது.
சுற்றுலா விசாவில் செல்லும் பாகிஸ்தானியர்கள் பள்ளிவாசல்களிலே பிக் பொக்கெட் அடிக்கும் செயல்களில் ஈடுபட்டு வருவதாக சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.
இவர்கள் தல யாத்திரை என்ற பெயரிலேயே விசாவைப் பெற்றுக்கொள்கின்றனர். அண்மையில் பாகிஸ்தானின் பஞ்சாப் நகரில் பிச்சைக்காரன் ஒருவனிடமிருந்து ஐந்து இலட்சம் பாகிஸ்தானிய ரூபாவையும் சவூதி அரேபிய கடவுச் சீட்டையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
உலகளாவிய ரீதியில் கைது செய்யப்படும் பிச்சைக்காரர்க ளில் 90% பாகிஸ்தானியர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் சுற்றுலா விசாவுக்கு விண்ணப்பிப்ப வர்களிடம் சுற்றுலா செலவுக்காக எடுத்துச் செல்லும் பணத்தை காட்டுமாறு கோருவதோடு போதியளவு பணமின்றி இருப்பவர்களுக்கு விசா மறுக்கப்படுகிறது. (ச-25,6)

பங்களாதேஷில்

## கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்துக்கள் மீதான வன்முறை

டாக்கா, ஓக. 14
பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து பங்களாதேஷில் இந்துக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலுள்ள தக்ஷிணேஸ்வரி ஆலயம் உட்பட இந்து வழிபாட்டுத்தலங்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. இந்துக்களின் கடைகள்,வீடுகள் தாக்கப்பட்டுள்ளன. இரண்டு இந்துக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவங்களையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்குள் பிரவேசிக்க முற்பட்ட பங்களாதேஷ் பிரஜைகள் சிலரை இந்திய - பங்களாதேஷ் எல்லையில் வைத்து இந்திய எல்லைப்படையினர் கைது செய்துள்ளனர். நான்கு பங்களாதேஷ் பிரஜைகள் ஏற்கனவே அசாம் மாநிலத்திற்குள் தஞ்சம் புகுந்துள்ளதாக அசாம் மாநில முதலமைச்சர் ஹிமாந்த பிஸ்வான் சர்மா தனது தளத்தில் பதிவிட்டுள்ளார். (ச-6)

## மருத்துவர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஓக.14
அநுராதபுரம், ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொரகேவ பிரதேசத்தில் மருத்துவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளதாக ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கெப்பித்திக்கொல்லாவ மருத்துவமனையில் கடமையாற்றும் 38 வயதுடைய மருத்துவரே உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகளை ஹொரவப்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## வருடாந்த பெருவிழா!

வரலாற்று பிரசித்திபெற்ற நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் உற்சவம் இடம் பெறும்.
27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன திருவிழாவும், 28ஆம் திகதி புதன்கிழமை வசந்தோற்சவமும், 29ஆம் திகதி வியாழக்கிழமை திருமண உற்சவமும், 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டை உற்சவமும், 31ஆம் திகதி சனிக்கிழமை சப்பர உற்சவமும், 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 2ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-100)


### வேலையாட்கள் தேவை

கொடிகாமம் நகரில் இயங்குகின்ற
Multy Shop (Fancy Shop) இற்கு
அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.
அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
077 811 8948

### யாழ் வணிகர் கழகம்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, இல 165 இல் இயங்கி வரும் யாழ் வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் 14.09.2024 அன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் இவ் அறிவித்தலை ஏற்று தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
திகதி : 14.09.2024 சனிக்கிழமை
நேரம் : காலை 10.30 மணி
இடம் : யாழ் வணிகர் கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
உபசெயலாளர்,
யாழ் வணிகர் கழகம்.
(CR/42913) J-1

### பெயர் மாற்றம்

அராலி தெற்கு காளிகோவிலடி, வட்டுக்கோட்டை இல் வசிக்கும் **மாணிக்கம் குணசேகரம் ஜெயமாலா** ஆகிய நான் எனது பெயரை **மாணிக்கம் குணசேகரம் கவித்தா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மாணிக்கம் குணசேகரம் கவித்தா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.
மாணிக்கம் குணசேகரம் கவித்தா
(CS/55924) J-1

### மரண அறிவித்தல்



**திருமதி நடேசபிள்ளை பரமேஸ்வரி**

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் பிரவுண் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடேசபிள்ளை பரமேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (12.08.2024) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (16.08.2024) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் பிரவுண் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தகவல்:
குடும்பத்தினர்.
(CS 1130) V-1

### 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 . 07 . 1982



ஆண்டவன் அடியில்
06 . 08 . 1992

**அமரர் தம்பிராசா சர்விழி (கிளி)**
(மாணவி - ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை)

அழகான உருவம் கொண்ட அன்பானவளே!... கிளியே
ஆண்டுகள் 32 ஆகுதம்மா நீர் எம்மை விட்டுப் பிரிந்து,
ஆனால் எம் இதயமோ உம் நினைவை விட்டு அகலவில்லை
என்றும் உம் நினைவுகள் தொடரும்...

கோப்பாய்காடு
மல்லாகம்
077 925 6739

10 வருடங்கள் உம்முடன்
வாழ்ந்த நினைவுகளுடன் என்றென்றும்
குடும்பத்தினர்
CS/1127) J-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> உண்மையான சிறந்த மனிதர்களுக்கான முதல் சோதனை என்பது அவர்களின் பணிவே.
>
> – ஜோன் ரஸ்கின்

புதன்
14.08.2024
புதன்கிழமை



# கல்வியின் வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு

■ பஞ்சாட்சரம் கங்காதரன்,
ஆசிரியர்,
யா/நெல்லியடி மத்திய கல்லூரி

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் உலக அளவில் தொழில்நுட்ப வளர்ச்சியில் அடுத்தகட்ட பாய்ச்சலாக வளர்ந்து வருகிறது. கல்வி, மருத்துவம், பொறியியல் துறைகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையில் காணப்படும் வேறுபாடாகிய படைப்பாக்கத் திறனை இயந்திரங்கள் மூலம் சாத்தியப்படுத்தினால் அதுவே செயற்கை நுண்ணறிவு அல்லது செயற்கை அதிதிறன் எனப்படும். மனித வாழ்வின் அனைத்து அங்கங்களிலும் புதிய எல்லைகளைத் தொடும் வகையில் வளர்ச்சி பெற்றுவரும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், கல்வித் துறையிலும் அசாத்தியங்களை நிகழ்த்தி வருகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த 75 ஆண்டுகளில் நாடு முன்னேற வேண்டுமானால் கல்விமுறை புதிய மாற்றத்துக்கு உள்ளாக வேண்டுமெனவும், நவீன தொழில்நுட்பமும் அறிவும் கல்வியின் புதிய ஆயுதங்களாக மாறியுள்ளதாகவும், நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு பலப்பட்டாலும் நாடு தொழில்நுட்பத்துடன் முன்னேறி மாற்றமடையாவிட்டால் பின்னோக்கிச் செல்லவேண்டிய நிலைதான் ஏற்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அவருடைய கருத்துகள் அத்தனையும் உண்மையானவை. ஜனாதிபதியின் கருத்துகளையடுத்து, இலங்கையில் 8ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்துடன் செயற்கை நுண்ணறிவை கற்கும் வாய்ப்பை பெறுவர் எனக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளமையையும் நாம் அவதானிக்கலாம்.

21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்கு மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். மனித நுண்ணறிவு தேவைப்படும் பணிகளைச் செய்யும் திறன்கொண்ட இயந்திரங்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவின் பங்கு தேவைப்படுகின்றது. 1943ஆம் ஆண்டு வாரன் மெச்சுவால் மற்றும் வால்டேர் பிட்ஸ் உருவாக்கிய கட்டமைப்பே முதலாவது செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்பாகும். இவர்கள் மூளையில் இருக்கும் நியூரோன்களை அடிப்படையாக வைத்து இந்த செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்பை உருவாக்கினர். செயற்கை நுண்ணறிவு 1956ஆம் ஆண்டில் ஓர் கல்வித் துறையாக டார்த் மவுத்து பணிப்பட்டறையில் நிறுவப்பட்டது. இத்துறை பல்வேறு காரணங்களால் செயலிழந்தது. எனினும், 2012ஆம் ஆண்டின் பின் முந்தைய அனைத்து செயற்கை அறிதிறன் நுட்பங்களையும் மிஞ்சும் வகையில் தற்போது அது அபார வளர்ச்சியடைந்து வருகின்றது.

### ஆழமாக ஊடுருவுகின்ற செயற்கை நுண்ணறிவு

செயற்கை நுண்ணறிவானது திட்டமிடல், பன்முகமாகச் சிந்தித்தல், எண்ணங்களைக் கற்றுக் கொள்ளல், பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளைக் காணல், பகுத்தறிவு, கற்றல், இயற்கை மொழிச் செயலாக்கம், புலக்காட்சி, தானியங்கி போன்றவற்றிற்காக அதிகம் பயன்படுகின்றது. செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆராய்சியாளர்கள் இந்தத் தொழில்நுட்பத்தில் தேடல், கணித உருப்பாக்கம், முறையான தர்க்கம், செயற்கை நரம்பியல் வலைப்பின்னல் ஆகிய சிக்கல் தீர்வு முறைகளையும், புள்ளியியல் நிகழ்தகவு, பொருளியல் ஆகிய துறைகளையும் ஒருங்கிணைத்துள்ளனர். கல்வியில் செயற்கை நுண்ணறிவின் மூலம் முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சியைக் காணலாம். சமீபத்தில் 'இ ஸ்கூல்' நடத்திய ஆய்வில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு 47.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. கட்டுரை எழுதல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், பாடநூல்களைக் கடந்த அறிவைப்பெறல், ஆய்வு மேற்கொள்ளல், ஆழ்ந்த ஞானத்தைப் பெறல், காலதாமதமின்றிக் கல்வி பயிலல், மாணவர்களை உற்சாகப்படுத்தும் வல்லமை போன்றவற்றையும் செயற்கை நுண்ணறிவு கொண்டுள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமானது ஆசிரியர்கள் முன்னேற்றத்துக்கான தீர்வுகளைப் பரிந்துரைப்பதுடன் மாணவர்களின் தவறுகளுக்கும் பதிலளிக்கிறது. கையெழுத்துப் பிரதிகள் உட்பட ஆவணங்களை டிஜிற்றல் மயமாக்குவது, தகவல்களை பிரித்தெடுத்துப் பயன்படுத்துவதை எளிதாக்குகிறது. கல்லூரியில் நுழையும் மாணவர்களின் முகங்களை ஸ்கான் செய்து அடையாளத்தை உறுதி செய்யும் முறையும் கொண்டு காணப்படுகிறது. ஆள்விரயம், காலவிரயம், நேரவிரயம், பணவிரயம் மற்றும் மனஉளைச்சலைக் குறைக்கிறது. வகுப்பறையில் இந்தத் தொழில்நுட்பம் பல்வேறு புதுமைகளைத் துல்லியமாக உண்டாக்கும். பல்வேறு கேலிச்சித்திர இயங்குபடம் அடங்கிய தொகுப்புகளை உருவாக்குதல், குழந்தைகளின் கவனத்தை அதிகம் ஈர்த்து கற்றல் சுமையானதாக, தண்டனையாக, வலியாக இல்லாமல் விரைவாக, எளிதாக, இயல்பாக, ஆனந்தமாக, கற்க செயற்கை நுண்ணறிவு வழிவகுக்கிறது.

> **தொழில்நுட்பத் தோல்விகள், செயலிழப்புகள் கற்றல் செயன்முறையை சீர்குலைக்கும். தொழில்நுட்பத்தை அதிகம் சார்ந்திருப்பது விமர்சன சிந்தனை, சிக்கலைத் தீர்க்கும் திறன் குறைவதற்கு வழிவகுக்கும். கல்விச் சூழலில் சிரமங்களை அனுபவிக்கக்கூடிய குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்களின் அணுகல் என்பது மிகவும் முக்கியமானது.**



எதிர்காலத்தில் அனைவரும் அறிவியல் வளர்ச்சியில் உச்சம் பெறவும், பல்வேறுபட்ட கற்றல் சூழல்களை உருவாக்கி கற்றலை எளிதாக்குவதற்கான கற்றல் சாதனங்களை உருவாக்கவும் செயற்கை நுண்ணறிவு உதவுகிறது. மாணவர்களுக்கு நிகழ்நிலை மதிப்பீடுகளை வழங்கி மாணவர்களை மேம்படுத்தவும், மாணவர்களை மேம்படுத்த ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் உத்திகளை மாற்றவும் இந்தத் தொழில்நுட்பம் உதவுகிறது என்றால் அதையெல்லாம் மறுப்பதற்கில்லை.

### ஆபத்தும் அதிகம்

செயற்கை நுண்ணறிவு மூலம் மாணவர்களும், ஆசிரியர்களும் பல நன்மைகளைப் பெற்றாலும் தீமைகளும் இருக்கவே செய்கின்றன. இந்தத் தொழில்நுட்பமானது மனிதத் தொடர்பின் அளவைக் குறைக்கின்றது. உதாரணமாக, கற்றல், ஊக்கம், ஆதரவு மற்றும் வழிகாட்டுதலில் ஆசிரியர் மாணவர் உறவுகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. ஆனால் செயற்றை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் அவற்றையெல்லாம் எதிர்பார்க்கமுடியாது.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் தற்போதைய கட்டத்தில் புதுமையான யோசனைகளை உருவாக்கமுடியாது, தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள முடியாது. மனித சேவைகள் குறைக்கப்படுகிறது. செயற்கை நுண்ணறிவின் அடிப்படையில் இயங்குதளங்களைப் பயன்படுத்தும்போது சரியானதாக நிர்வகிக்காது விட்டால் மாணவரின் தரவு ஆபத்தில் இருக்கக்கூடும். கல்விச் செயன்முறையை இயந்திரமயமாக்குவதுடன் இயற்கைக்கு மாறானதாகவும் இது மாற்றிவிடும்.

அத்துடன் இந்தத் தொழில்நுட்பத்தால் நினைவாற்றல் பலவீனமடைகிறது. தொழில்நுட்பத் தோல்விகள், செயலிழப்புகள் கற்றல் செயன்முறையை சீர்குலைக்கும். தொழில்நுட்பத்தை அதிகம் சார்ந்திருப்பது விமர்சன சிந்தனை, சிக்கலைத் தீர்க்கும் திறன் குறைவதற்கு வழிவகுக்கும். கல்விச் சூழலில் சிரமங்களை அனுபவிக்கக்கூடிய குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்களின் அணுகல் என்பது மிகவும் முக்கியமானது. எடுத்துக் காட்டாக குரல் தொடர்பு, காது கேளாமை போன்ற மாணவர்களை குறிப்பிடலாம். செயற்கை நுண்ணறிவு என்பது மகிழ்ச்சி, துயரம், ஏக்கம், வியப்பு, அன்பு, கருணை, அச்சம், கோபம், வீரம் என எந்த உணர்வுகளுமற்றது. ஆதலால் இது மாணவர்களுக்கு பிழையான முன்மாதிரியாக அமையக்கூடும்.

### தேவைப்படும் மாற்றங்கள்

ஆசிரியர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டுக்குத் தேவைப்படும் குறியீட்டு அறிவை கற்றுக்கொள்ள முன்வரவேண்டும்.

மேலும் பிற்காலத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் காரணமாக தோற்றுவிக்கப்படும் ஆளில்லா வகுப்பறையை நோக்கி நகரும் கல்வியை சமாளிக்கவும், தம் திறன்களையும் 'வலியது வாழும்' எனும் கோட்பாட்டுக்கேற்ப தயார்படுத்திக்கொள்வது ஆசிரியர்களது கடமையாகும். பாரம்பரியக் கற்பித்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையான கற்பித்தலினையும் சமமாகப் பயன்படுத்தல் வேண்டும்.

மாணவர்களின் தரவு பாதுகாக்கப்படுவதையும், தொழில்நுட்பம் பொறுப்புடன் பயன்படுத்துவதையும் கல்வி நிலையங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமானது, தேவைப்படும் இடங்களில் முறையாக பயன்படுத்தப்பட்டால் உலகளாவிய கல்வி முறையை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை திறக்க உதவும் என்பதில் ஐயமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றிதழ்களுக்கு இல்லையா சாபவிமோசனம்?

## கலைமுகம் 77 ஆவது இதழை முன்வைத்து ஒரு குறிப்பு

தபின்




ஈழத்துத் தமிழிலக்கியச் சூழலில் சிற்றிதழ்களின் ஆயுள் மிகக்குறுகியது. ஆனால் இப்படி வந்த சிற்றிதழ்களே, ஈழத்து இலக்கியத்தின் போக்கைத் தீர்மானிக்கும் வல்லமை கொண்டவையாக இருந்தன. அந்த நன்றிக்கடனை கிஞ்சித்தும் கருத்திற்கொள்ளாமல், சிற்றிதழ்களை அழியவிட்டு,வேடிக்கை பார்த்து மகிழும் ஈழத்தமிழிலக்கியச் சூழலில் 34 வருடங்களைத் தாண்டி, 77 ஆவது இதழாக மலர்ந்திருப்பதென்பது கலைமுகம் காலாண்டிதழ் நிகழ்த்தும் அசாத்தியமே. அந்த அசாத்தியத்தின் பின்னணியில் திருமறைக்கலாமன்றம் மட்டுமல்லாது கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக கலைமுகத்தின் ஆசிரியராக இருக்கும் செல்மர் எமிலும் இருக்கவே செய்கிறார். படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்களைக் கோரல், பெற்றுக்கொள்ளல், தேர்ந்தெடுத்தல், செம்மையாக்கல், தொகுத்தல், வடிவமைப்பைத் தீர்மானித்தல், ஒப்புநோக்குதல், விளம்பரங்களைச் சேகரித்தல், விநியோகித்தல்,விற்பனை செய்தல் என்பவற்றோடு இறுதியில் துண்டுவிழும் தொகையையும் தன் தலையில் சுமத்தல் என செல்மர் எமில் கலைமுகத்தின் எல்லாமுமாக இருக்கின்றார். அந்த அர்ப்பணித்தலின் விளைவை வழக்கமாக ஒவ்வொரு கலைமுகத்திலும் காண முடியும். அதை இந்த 77 ஆவது இதழும் நிரூபணம் செய்திருக்கின்றது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், பத்தி எழுத்துகள், மொழிபெயர்ப்புகள், நூல் மதிப்பீடுகள் என கலைமுகத்தின் படைப்புத்தேர்வு, சகல வகையான வாசகர்களினதும் தேடல்களுக்குத் தீனி போட்டுவிடவேண்டும், அதனூடாக சிற்றிதழ்களுக்கான குறைந்தபட்ச வாசகப்பரப்பையேனும் இழக்காதிருக்கவேண்டும் என்ற தவிப்பை புலப்படுத்துகின்றது. அதற்காக கையில் சேர்ந்த அத்தனை ஆக்கங்களையும் சகட்டுமேனிக்கு பக்கநிரப்பிகளாகப் பயன்படுத்தாமல், காலத்தேவையறிந்து, படைப்புகளின் கனதியைக்கண்டறிந்து கலைமுகத்துக்குள் உள்ளடக்கியிருப்பது அதன் தனித்துவத்தை பேண உதவுகின்றது.

**கலைமுகத்தின் இன்னொரு சிறப்பு, எந்த வேறு கோட்பாடுகளுக்குள்ளும் தன்னைத் தொலைத்துவிடாமல், எல்லாக்கோட்பாடுகளையும் அளவறிந்து தக்க இடங்களில் பயன்படுத்துவதுதான். இதனால் தம்மைச்**

> **கையில் சேர்ந்த அத்தனை ஆக்கங்களையும் சகட்டுமேனிக்கு பக்கநிரப்பிகளாகப் பயன்படுத்தாமல், காலத்தேவையறிந்து, படைப்புகளின் கனதியைக்கண்டறிந்து கலைமுகத்துக்குள் உள்ளடக்கியிருப்பது அதன் தனித்துவத்தை பேண உதவுகின்றது.**

சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டுக்கொண்டு அதற்குள் குறுகியிருக்கும் ஈழத்து இலக்கியச் சூழலைக் கட்டுடைத்து, இன்னொரு தளம் நோக்கிக் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும். கூடவே ஒவ்வொரு கோட்பாட்டு எல்லைகளுக்குள் தமது படைப்பாக்க முயற்சிகளைச் சுருக்கிக்கொண்டுள்ளோர், ஏனைய கோட்பாடுகளினடியாகப் பிறக்கும் படைப்புகளை வாசிக்கவும் கலைமுகம் களமமைத்திருக்கிறது. குறிப்பாக 'பின்னை-பின் நவீனத்துவம்; கலகத்திலிருந்து மரபுக்கு' என்ற ஜிப்ரி ஹாசனின் கட்டுரை இந்தமுறை கலைமுகத்தின் கனதியை இன்னும் ஒருபடி உயர்த்திவிட்டது.

படைப்புகளில் மட்டுமல்லாது படைப்பாளிகளிடத்தும் ஒரு பரந்துபட்ட பார்வையைக் கலைமுகம் கொண்டிருக்கிறது. ஏற்கனவே இலக்கிய உலகில் நன்கறியப்பட்ட படைப்பாளிகளுக்கு மட்டுமல்லாது இளையோருக்கும், புதியவர்களுக்கும் கலைமுகம் களம் அமைத்திருக்கிறது. இம்முறை வெளிவந்த 77 ஆவது இதழிலும் புதியவர்களின் படைப்புகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இதனையே உணர்த்துகின்றது. 350 ரூபா பெறுமதியில், 72 பக்கங்களில் கலைமுகத்தின் 77 ஆவது இதழின் ஒவ்வொரு பக்கங்களிலும், ஆசிரியரின் கடுமையான உழைப்பும், கலைமுகத்தை எப்பாடுபட்டாவது வெளிக்கொணர்ந்தே தீருவது என்ற பற்றும் வெளித்தெரிகின்றன. ஆனால் அந்த உழைப்பையும், அர்ப்பணிப்பையும் காலமும், ஈழமும் கண்டுகொண்டால், தமிழ்ச் சிற்றிதழ்கள் மீதான குற்றுயிர் சாபம் கலைமுகத்தின் மூலம் நீங்கக்கூடும்.

# நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம், உடற்பயிற்சி

## ஆரோக்கிய வாழ்வுக்கான எத்தனம்

உடுவிலூர்க் கலா

இன்று திரும்பும் இடமெங்கும் தீராத் துயரோடு மனிதம் வலி சுமந்து வாழ்கிறது. ஆரோக்கியமாக இருந்தவர்கள் திடீரென உடல் நலம் பாதிக்கப்படுகின்றனர். அந்தளவுக்கு எமது உணவுப் பழக்க வழக்கங்களும், ஏனைய போதைப் பழக்கங்களும் வாழ்வியலை, ஆரோக்கியத்தைப் புரட்டிப் போட்டுள்ளன.

அண்மையில், சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மன் காலத்தின் தேவை கருதி, 'நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம், உடற்பயிற்சி' என்ற நூலை வெளியீடு செய்திருந்தார். இந்த நூலானது, நீரிழிவின் தாக்கத்தில் இருப்போருக்கும், நீரிழிவின் வாசலில் காத்திருப்போருக்கும், நீரிழிவு வராமல் தம்மையும் தம் சந்ததியையும் பாதுகாக்க முனைவோருக்கும் மிகச் சிறந்த நூலாகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இடித்துரைக்கின்ற கருத்தை அட்டைப்படத்தினூடாகத் தெளிவுபடுத்தி, வாழையிலை உணவென்றால் அமர்ந்துண்ணுவதையும், கிள்ளுக்கரண்டியால் சோற்றையும், அள்ளும் கரண்டியால் கறியையும், குவளை நிறைந்த நீரையும் காட்சிப்படுத்தி, எப்படியும் உண்ணாது இப்படி உண்ணுங்கள் நீடூழி வாழ்வீர்கள் என்று சொல்லித் தொடர்கிறார்.



தெல்லிப்பழை மருத்துவமனையின் பொது மருத்துவநிபுணர் பா.நிசாகன், கைதடி சித்த போதனா மருத்துவமனை மருத்துவர் த.திலீபன் ஆகியோரின் அணிந்துரையோடு தொடங்கி,நூலாசிரியரின் முகவுரையோடு உரைகள் நிறைவுறுகின்றன. 'நீரிழிவு முகாமை அறிமுகம்' என்ற தலைப்பில் தொடங்கி, 'நீரிழிவு உணவு முறையில் திருக்குறள்' எனப்பதினைந்து தலைப்புகளில் இந்த நோய் தொடர்பில் விவரித்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. அந்த வகையில் நீரிழிவு கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதென்றும், சித்த மருத்துவத்தில் மேகம் அல்லது சலக்கழிச்சல் எனும் நோயே நீரிழிவு எனப்பெயர் கொண்டதாகவும், 15ஆம் நூற்றாண்டில் கிரேக்க மருத்துவர் அரேடஸ் என்பவருக்கு அதிகளவு சிறுநீர் வெளியேறியதாகவும், அந்தநோய்க்கு டயபட்டீஸ் எனப் பெயரிட்டதாகவும் இந்த நோயின் வரலாற்றினை பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாண சித்த மருத்துவ நூல்களான பரராசசேகரம், செகராசசேகரம் மற்றும் மேகவாகடத்திரட்டு என்பவற்றுடன் திருக்குறள் போன்றன உசாத்துணை நூல்களாகப் பயன்பட்டுள்ளன. உண்மையில் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு ஆய்ந்தறிந்து படைத்த நூலாசிரியருக்கு நன்றி கூறுவதோடு இதுபோன்ற நூல்களை இன்னும் படைக்க வேண்டுமென்பதே வாசகர்களின் பெருவிருப்பமாகவும் காணப்படுகின்றது. ஒவ்வொரு வீடுகளிலும் கட்டாயம் இருக்கவேண்டிய பொக்கிஷம் இந்த நூல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒலிம்பிக்

## ஒரு சிலிர்ப்புணர்வு!



ஒலிம்பிக் என்பது விளையாட்டின் மீது தீராத ஆர்வம் கொண்டவர்களின் பெருங்கனவு. பண்டைய கிரேக்கம் தந்த இந்த விளையாட்டுத் திருவிழாவை, நவீன காலத்தின் அடையாளமாக உருமாற்ற நினைத்தார் பிரெஞ்சுக் கல்வியாளர் பியர் தெ கூபர்டின். உலகில் அதிகமானோரால் பார்க்கப்படுபவையாகக் கால்பந்து, ரென்னிஸ், கிரிக்கெட் போட்டிகள் இருக்கலாம். ஆனால், இந்தப் போட்டிகளைவிட அதிகமாக எதிர்பார்க்கப்படுவது ஒலிம்பிக். காரணம், அதன் தனித்தன்மை. ஒருபுறம் ஐ.பி.எல். போன்ற தனியார் விளையாட்டுப் போட்டிகள் திட்டமிட்டுப் பரபரப்பை அதிகரிக்கின்றன, மக்களின் பொழுதுபோக்கு உணர்வைத் தங்களுக்கான மூலதனமாக மாற்றிக்கொள்கின்றன. இதனால் விளையாட்டின் அடிப்படை அம்சங்கள் பல அடிபட்டுப்போகின்றன. மற்றொருபுறம் விளையாட்டுகளைத் துல்லியமாக்கவும், விதிமுறைகளைத் திட்டவட்டமாகக் கடைப்பிடிக்கவும் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற தலையீடுகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

இவையெல்லாம் இருந்தாலும்கூட, விளையாட்டுப் போட்டிகளில் மனிதர்களின் நேரடிப் பங்கேற்பு, யோசனை, புதிய உத்தி அந்த விளையாட்டுக்குப் புதிய பரிமாணத்தை வழங்கலாம், சுவாரசியத்தைக் கூட்டலாம், பரபரப்பை அதிகரிக்கலாம். மனித உடல், ஆரோக்கியமான பொழுதுபோக்குத் திறன்களின் உச்ச வெளிப்பாடுதான் ஒலிம்பிக் போட்டிகள். அப்படி இருக்கவேண்டுமென்றுதான் கூபர்டின் உள்ளிட்ட முன்னோடிகள் அதை நிறுவியபோது எதிர்பார்த்தார்கள்.

### கற்பிதம் தகர்ப்பு:

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஒலிம்பிக் போட்டி தொடங்கிவிட்டது. 1900, 1924 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் நடைபெற்றிருந்தாலும்கூட, 1936 பெர்லின் ஒலிம்பிக் போட்டியைப் பிரமாண்டமாக நடத்தி, உலகுக்குத் தங்களைப் பற்றி வெளிச்சம் போட்டுக் காட்ட நினைத்தது, ஜேர்மனியை அப்போது ஆண்ட ஹிட்லரின் நாஸி கட்சி. அந்தப் போட்டிகள்தான் முதன்முதலில் தொலைக்காட்சியிலும் பரவலாக வானொலியிலும் ஒளிபரப்பப்பட்டன. நாஸி கட்சிக் கொள்கைப்படி ஆரியர்கள்தான் அனைத்திலும் உச்சத்தில் இருக்கவேண்டும் என ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் எதிர்பார்த்தபோது, தன் விளையாட்டுத் திறமையால் அந்தக் கற்பிதத்தை உடைத்தார் ஆபிரிக்க அமெரிக்கரான ஜெஸி ஓவன்ஸ். 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம், நீளம் தாண்டுதல், தொடர் ஓட்டம் ஆகிய நான்கிலும் தங்கப்பதக்கம் வென்று ஜெஸி ஓவன்ஸ் சாதித்தார்.

இவ்வளவுக்கும் நீளம் தாண்டுதல் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் பதற்றமாக இருந்த ஜெஸி ஓவன்ஸை நிதானப்படுத்தியவர் ஜேர்மனியரான லஸ் லாங். எப்படியாவது பதக்கத்தைத் தனதாக்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவதைவிட, விளையாட்டு வெற்றிபெற வேண்டும் என நினைக்கும் லஸ் லாங் போன்ற ஆளுமைகள் பதக்கம் பெறாமலே மனங்களை வென்றுவிடுகிறார்கள்.

### நவீன காலத்தில்...

ஜெஸி ஓவன்ஸின் சாதனையைக் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கழித்து, 1984 லொஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் கார்ல் லூயிஸ் சமன்செய்தார். 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் ஜமைக்காவின் உசைன் போல்ட் 9.69 விநாடிகளில் 100 மீற்றர் தொலைவை ஒரு சிவிங்கிப்புலியைப் போலச் சடாரெனக் கடந்தபோது, ஓடுதளங்கள் தீப்பிடிக்காத குறைதான். அதே ஒலிம்பிக்கில் 200 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் தொடர் ஓட்டத்திலும் அவர் சாதனை படைத்தார் என்றால் சும்மாவா? கால்பந்து, டென்னிஸ் வீர, வீராங்கனைகளுக்கு இணையான புகழை ஒரே நாளில் அவர் அறுவடை செய்தார்.

பெண்களும் ஒலிம்பிக் தருணங்களுக்கு ஒளியேற்றியிருக்கிறார்கள். 1976 மொன்றியேல் ஒலிம்பிக்கில் ருமேனியாவின் நாடியா காமென்சி ஜிம்னாஸ்டிக்ஸில் 10 க்கு 10 எடுத்தபோது, அன்றைக்கு இருந்த மின்னணுக் காட்சிப்பலகைகளால் அதைக் காட்டமுடியவில்லை. காரணம் 9 வரைதான் அந்தப் பலகைகளில் இடம்பெறச் சாத்தியம் இருந்தது. 1988 சியோல் ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் பிளாரன்ஸ் கிரிபித் ஜாய்னர் 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் அதற்கு முன்னதாக ஒலிம்பிக் தேர்வுக்கான 100 மீற்றர் ஓட்டத்திலும் உலக சாதனை படைத்தார். இன்றுவரை அந்தச் சாதனைகள் முறியடிக்கப்படவில்லை.

### ஒத்திகையற்ற நாடகம்:

2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் உயரம் தாண்டுதலில் கத்தாரின் மாதஸ் இஸ்ஸா பர்ஷிம், இத்தாலியின் ஜமர்கோ தம்பேரி இருவரும் ஒரே உயரத்தைத் தாண்டியிருந்தனர். கூடுதல் உயரத்தைத் தாண்டி ஒருவர் மட்டும் தங்கப் பதக்கத்தை வென்றிருக்கமுடியும். ஆனால், அதற்கு மாறாகத் தங்கப் பதக்கத்தை இருவரும் பகிர்ந்துகொண்டு உயர்ந்த மனிதப் பண்பை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினார்கள். இப்படி நம் காலத்துக்கென்று சிரிப்பு, அழுகை, உணர்வுவயப்படுதல், சோகம், கொண்டாட்டம் போன்ற பல்வேறு உணர்வுக் கலவைகளும் அசைபோட்டு மகிழ்வதற்கான தருணங்களும் தேவைப்படுகின்றன. சுருக்கமாக ஒத்திகையில்லாமல் ஒரு நாடகம் நடக்க வேண்டும். இது போன்ற சிலிர்ப்புணர்வை ஏற்படுத்தும் மாயாஜாலத் தருணங்கள் நிறைந்ததுதான் இந்த ஒலிம்பிக்.

*மூலம்: தி ஹிந்து*

சிரிப்பு, அழுகை, உணர்வுவயப்படுதல், சோகம், கொண்டாட்டம் போன்ற பல்வேறு உணர்வுக் கலவைகளும் அசைபோட்டு மகிழ்வதற்கான தருணங்கள் நிறைந்ததுதான் இந்த ஒலிம்பிக்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாய் ஒரு நட்சத்திரம்

ஆர்.பிரகாஷ்



இப்போதெல்லாம் நீ எனைத் தவிர்த்துக் கொள்கிறாய்

தேவி...!

30 வெள்ளிக்கு இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸாக என்னை எதிர்கொள்ளச் சிரமப்படுகின்றாய். உன் அலைபேசியின் தொடுதிரையில் என் பெயரின் பின்னால் பொறிக்கப்பட்டிருந்த இதயம் இப்போது இழக்கப்பட்டிருக்கின்றது. ஓயாது வினவிக்கொண்டிருந்த நீ, உரையாடலை மாத்திரைகள்போல் மட்டுப்படுத்தியிருக்கின்றாய்.

எந்தையின் சிந்தை சரியானால், இன்னும் ஓரிரு இராப்பொழுதுகளில் உனக்கு நான் எவனோ ஒருவன் ஆகியிருப்பேன்...

ஒன்று கேள்... யூதாஸும் வரலாற்றில் வாழ்கிறான்தான். நாளை, என் பிரியம் உனை ஈர்க்க நேர்ந்தால், கல்லறையின் கால்மாட்டில் 30 வெள்ளிகளையும் வைத்துவிடு.. அது சாதிக்கானதோ, சமயத்துக்கானதோ சாட்சியமாக என் உயிர்க்கூட்டுடன் உக்கட்டும்...

இறுதியாக உனக்கு நிமிடங்களிருப்பின், என் அலைபேசியை எடுத்துச்செல். பிரியத்தின் முதல்நாள் உன் பெயருக்கருகே பொறிக்கப்பட்ட இதயம் இப்போதும் அதில் அழியாதிருக்கிறது... கண்ணீரைத் துடைத்துவிட்டு அண்ணார்ந்து பார்... ஒரு நட்சத்திரம் புதிதாய் மின்னுகின்றதல்லவா. அது நான்தான்...

'கலாவிபூஷணம்'
இரா.நிஷாந்தன்
ஆசிரியர்

# குருபக்தியே வாழ்வின் உயர்நிலை!

எம் வாழ்வில் மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் நால்வர் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். அவர்களில் குரு முதன்மையானவர். அறியாமை எனும் இருளை அகற்றி வாழ்வில் ஞானம் நல்லொளியைப் புகட்டி எம்மை வழிப்படுத்துபவரே குரு. குரு ஆசிரியர் எனவும் அழைக்கப்படுகின்றார். குரு என்பவர் வேதங்களை கற்று, சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராக, ஒழுக்கநெறிகளைப் பின்பற்றி வாழ்பவராக விளங்குகின்றார். குரு ஒருவரின் துணையின்றி யாருமே தம் வாழ்வில் உயர்வடைய முடியாது என்பது உண்மையாகும்.



## குருகுலக்கல்வி

முன்னைய காலத்தில் குருகுலக்கல்வி முறையே காணப்பட்டது. கல்வி கற்கவேண்டும் எனும் விருப்பத்துடன் குரு ஒருவரை நாடி வரும் சீடர்களை குருவானவர் தம் மாணவர்களாக ஏற்றுக் கொண்டு அவர்களை தம் ஆச்சிரமத்தில் தங்க வைத்து அவர்களுக்குக் கல்வி மற்றும் சகல கலைகளையும், ஒழுக்க நெறிகளையும் வாய்மொழி வாயிலாகக் கற்றுக் கொடுப்பார். அவற்றை மாணவர்களும் மனப்பாடம் செய்து குருவிடம் ஒப்புவிக்கவேண்டும். குருகுலக்கல்வி முடிவடையும் வரைக்கும் குருவோடு தங்கியிருக்கும் சீடன் ஒருவன் குருவுக்குப் பணிந்து அவருக்குப் பணிவிடைகளை ஆற்றி குருவின் மனவிருப்பத்துக்கு உரியனவாக மாறுகின்றான். தனது சீடன் கல்வி ஞானங்களில் முழுமையடைந்து விட்டான் என்பதை அறியும் குரு அவனை தனது ஆச்சிரமத்தில் இருந்து விடுவிப்பார்.



## குருதட்சணை

குருகுலத்தில் குருவிடம் முழுமையான கல்வியைப் பெறும் சீடர்கள் குருகுலத்தை விட்டு வெளியேறும் முன்னர் குருவுக்கு குருதட்சணை வழங்கியே செல்லமுடியும். அவ்வாறு குரு வேண்டிய குரு தட்சணைகளை அளித்து சிறப்புப் பெற்றுள்ள சீடர்களின் தன்மைகள் சிலவற்றை நோக்குவோம். பகவான் கிருஷ்ணர் தம் குருவாகிய சாந்தீபனி முனிவர் வேண்டியபடி இறந்துபோன குருவினது புதல்வனை உயிருடன் மீட்டு வந்து கொடுக்கின்றார். ஏகலைவன் எனும் வில்லாளன் தன் குருவாகிய துரோணர் குருதட்சணையாக வேண்டியவாறு தன் கைப் பெருவிரலை வெட்டிக் கொடுக்கின்றான். துரோணாச்சாரியார் பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களிடம் பாஞ்சால நாட்டு மன்னன் துருபதனை போரில் வென்று அவனை தேரில் கட்டி இழுத்து வந்து தன் முன்பாக நிறுத்த வேண்டும் எனும் குருதட்சணையை வேண்டுகின்றார். பாண்டவர்கள் தம் குரு வேண்டிய குருதட்சணையை அளித்து குருவின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றனர்.

## குருவின் மேன்மை

கடவுள்களும், கடவுள் அவதார புருஷர்களும் குருவின் துணை கொண்டு ஞானம் மற்றும் வித்தைகளைக் கற்றுள்ளனர். ஆயகலைகளுக்கு அதிபதியாக விளங்கும் கல்விக் கடவுளாகிய சரஸ்வதிதேவிக்கே ஒரு குரு இருக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவரே ஹயக்ரீவர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சாந்தீபனி முனிவரை குருவாகக் கொண்டு கல்வி கற்றுள்ளார். சவுனாகாதி முனிவர்கள் நால்வருக்கு இறைவன் தட்சணாமூர்த்தியாக இருந்து கல்வி போதித்துள்ளார். ஸ்ரீ இராமருக்கு குருவாக இருந்தவர் வஷிட்ட முனிவர். பஞ்சபாண்டவர் மற்றும் கௌரவர்களுக்கு குருவாக விளங்கியவர் துரோணர். பிதா - மகர் பீஷ்மர் மற்றும் கர்ணன் ஆகியோருக்கு குருவாக இருந்தவர் பரசுராமர்.



குரு என்பவர் இறைவனுக்கு நிகரானவர். எழுத்தைக் கூறச்செய்து அதை எழுதுவித்தவன் நாம் கண்ணால் காணும் குருவே. குரு என்பவரே எம்மை குறையின்றி வாழ வழி செய்பவர். குருவானவர் எப்போதும் சமநிலை பேணுபவர். குருவே எமக்குத் துணையாக அருகில் இருந்து எம் தவறுகளைத் திருத்தி எம்மை தர்ம நெறியில் ஆற்றுப்படுத்துகின்றார். வித்தையைக் கற்றுத் தரும் குருவின் பார்வையால் எமது பாவங்கள் யாவும் அகன்றுவிடும். குருவின் வழிகாட்டலால் தடைகள் யாவும் தகர்ந்து போய்விடும்.

குருவின் ஆசியினால் காரியங்கள் யாவிலும் வெற்றியே நிறைந்திடும். ஆனால் ஒருவன் தனக்கு கல்வி கற்றுத் தந்த குருவை மறந்து போயின் அவனது வாழ்க்கை அதன் பின் நரக வாழ்க்கையாகும். அவனுக்கும் முக்தி என்பதும் இல்லாமற் போய்விடும். குருவுக்குப் பொய் உரைப்பது மாபெரும் பாவமாம். ஆகவே மாணவப் பருவத்தில் இருந்தே குரு பக்தியை பேணி குருவின் நல்லாசியினால் வாழ்வில் சிறப்புற்று வாழ நாம் முயற்சிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு...

மன்னார் மருத்துவமனையில் கடந்த மாதம் 27ஆம் திகதி சேர்க்கப்பட்ட இளம் தாயான ம.சிந்துஜா, பிரசவத்தின் பின்னரான அதிக குருதிப்போக்கால் உயிரிழந்திருந்தார். இவரது உயிரிழப்பு மருத்துவ கவனவீனத்தால் ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் கடந்த 5 ஆம் திகதி 5 பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைக் குழு அன்றைய தினமே மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்ததுடன் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் கூடி ஆராய்ந்து தமது ஆரம்ப புலன் விசாரணை அறிக்கையை, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலரிடம் கையளித்தது. விசாரணைக் குழு 12 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது. அத்துடன் 21 ஆவணங்களையும் விசாரணைக் குழு திரட்டியுள்ளது.

விசாரணைக்குழு தனது அவதானத்தில், சிந்துஜா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது விடுதி இல. 5 மற்றும் 6 க்குரிய 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்கள் அங்கிருக்கவில்லை. விடுதிக்குள் உள்ள 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான அறையிலும் அவர்கள் தங்கியிருக்கவில்லை. அவர்கள் தங்களுக்கான விடுதிகளில் தங்கியிருந்துள்ளார்கள். இந்தச் சம்பவம் நடக்கும் வரையில் 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கடமைநேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் இரண்டாவது 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்கள் எவரும் அங்கு நியமிக்கப்பட்டிருக்கவுமில்லை. தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ மாதுக்கள், சிந்துஜா சேர்க்கப்பட்ட அதிகாலை 2.30 இலிருந்து காலை 7 மணி வரையில் அவரைக் கண்காணிக்கவில்லை. தாதிய உத்தியோகத்தர், மருத்துவ மாதுக்கள் 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர் வந்து பார்வையிடாத நிலையில், 'ஒன்கோல்' தாதி, ஒன்கோல் மேற்றன், ஒன்கோல் மகப்பேற்று மருத்துவர், மருத்துவமனைப் பணிப்பாளர் ஆகியோருக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை.

விடுதிப் பணியாளர்களிடையே தொடர்பாடல் மோசமான நிலையில் உள்ளது. மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் ஆகியோர் மிக மோசமான எதிர்மறைச் சிந்தனை உடையவர்களாக உள்ளனர். அதேவேளை, வெளிநோயாளர் பிரிவு மருத்துவர் நோயாளியைப் பார்வையிடவேண்டும் என எழுதியுள்ளமையை தாதிய உத்தியோகத்தர் தெரியப்படுத்திய பின்னரும் 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர் பார்வையிடவில்லை என விசாரணைக் குழு தனது அவதானத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு அமைவாக, சிந்துஜாவின் உயிரிழப்பு தடுக்கப்பட்டிருக்கக் கூடியது என்றும் இந்த உயிரிழப்புக்கு மருத்துவ அலட்சியமே காரணம் எனவும் விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் அன்றைய இரவுக் கடமைக்குரிய மருத்துவ உத்தியோகத்தரான ரந்தெனிய, தாதிய உத்தியோகத்தர்களான விஜயசிங்க, குரூஸ், மருத்துவ மாதுக்களான விஜயரதி செல்வா, ரத்னம் எமில்டா ஆகியோரை விசாரணை முடிவடையும் வரை உடனடியாக குறித்த விடுதியிலிருந்து இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும், இவர்கள் 5 பேருக்கும் எதிராக மருத்துவ அலட்சியத்துக்காக தனித்தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது உள்ளிட்ட 14 விடயங்களை விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதற்கு அமைவாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் நியமனம் பெற்றுள்ள தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ மாதுக்கள் ஆகியோருக்கு நேற்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிக பணி நீக்கக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் அவர்களுக்கான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் இன்று வழங்கிவைக்கப்படவுள்ளன.

அதேவேளை இந்த விசாரணை அறிக்கை கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மருத்துவர்களின் நியமனம் கொழும்பு சுகாதார அமைச்சுடன் தொடர்புடையது என்பதால் அவர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வடக்கு சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ளது. (அ-ஒ-5)

## தீர்வு...

வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்த முன்னெடுப்புகளை மேற்கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளை நேற்று சஜித் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திப்பின்போது, சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைத் தமிழர்கள் நீண்டகாலமாகக் கோரிவருகின்றபோதிலும், தொடர்ந்தும் சிங்களத் தலைவர்களாலும் தேசியக் கட்சிகளாலும் தமிழர்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். இதனால்தான் இம்முறை தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சஜித்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு, நான் இதுவரை இலங்கையின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ பதவி வகிக்கவில்லை. அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டும் பட்சத்தில் நிச்சயம் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கியே தீருவேன். கடந்தகால கசப்பான அனுபவங்களை வைத்து, அவ்வாறான அரசியல் தலைவர்கள் போன்றே நானும் செயற்படுவேன் என்று எண்ணவேண்டாம் என சஜித் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எவரொருவருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளது. ஆதலால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவை நான் மதிக்கின்றேன். ஆனாலும் தேசிய ரீதியிலான தேர்தலில், இன, மத, மொழி அடையாளங்களோடு வேட்பாளர்கள் களமிறக்கப்படுவது ஒற்றுமையைச் சீர்குலைக்கலாம் என்றும் சஜித் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதற்கட்டமாக 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்தத் தயாராகவுள்ளதாகவும், காணி விடுவிப்பை மேற்கொள்வது, காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்துவது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகளை நிறுத்துவது, விசாரணை இல்லாமல் சிறையிடப்பட்டவர்களை விடுவிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் என்ற வாக்குறுதியையும் சஜித் தமிழ்ப் பிரதிநிதிகளிடம் வழங்கியுள்ளார். அத்துடன், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இதர பிரச்சினைகளுக்கு தன்னுடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் தனிக்குழு அமைக்கப்பட்டு பிரச்சினைகள் கையாளப்படும் என்றும் சஜித் தெரிவித்துள்ளார். சஜித்தின் கருத்துகளைக் கேட்டறிந்த தமிழ்ப் பிரதிநிதிகள், விரைவில் மற்றையவர்களுடன் பரிசீலித்து இதுதொடர்பான இறுதி முடிவைத் தெரியப்படுத்துவதாக சஜித்திடம் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## குற்றம்செய்த...

தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். இது தொடர்பில் மருத்துவ கலா நிதி செந்தூரன் மேலும் தெரிவித்ததாவது:-

"மன்னார் பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த சிந்துஜா என்ற இளம் தாய் உரிய மருத்துவக் கவனிப்பு வழங்கப்படாத நிலையில் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இறப்புக்குக் காரணமானவர்கள் உடனடியாகத் தண்டிக்கப்படவேண்டும். உண்மையில் இந்த மருத்துவக் குற்றத்தைப் புரிந்தவர்கள் ஏன் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்று புரியவில்லை. இந்த இறப்பை இருட்டடிப்புச் செய்து குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காகவா இந்தத் தாமதம்? என்றும் எண்ண வேண்டியுள்ளது.

ஓரிரு மருத்துவர்கள் செய்யும் தவறுகளால் ஒட்டுமொத்த மருத்துவர்களையும் அனைவரும் தவறாக எண்ணுகின்ற நிலையே காணப்படுகின்றது. தவறு செய்யும் மருத்துவர்களுக்கு நாமும் உடந்தையாக இருக்கின்றோம் என்ற பழிச்சொற்களைக் கேட்கவேண்டியுள்ளது"- என்றார். (அ-ம-60)

## சார்பு...

யுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை போட்டியிடும் பல சுயேச்சை வேட்பாளர்கள் ஒரு பிரதான வேட்பாளருடன் தொடர்புடையவர்கள் என்பது வெளிப்படையான விடயம். தேர்தலில் வாக்குகளைப் பெறவும், வாக்குகளைப் பிளவடையச் செய்யவும் அவர்கள் சார்பு வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

என்னுடைய அனுபவத்தின் மூலம் பல பிரதான வேட்பாளர்களின் சார்பு வேட்பாளர்களாக பல சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பதை என்னால் உறுதியாகத் தெரிவிக்க முடியும். ஒரு சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவளிப்பதற்காக அந்தக் கட்சியுடன் நெருங்கித் தொடர்புடைய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

புதிய விதிமுறைகளின் மூலமே இந்த நிலையை மாற்றியமைக்க முடியும். உள்ளூராட்சித் தேர்தல்களில் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு முறையை மாகாணசபைத் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலுக்கும் விஸ்தரிக்க வேண்டும்" - என்றார். (அ-ம)

## அதிகாரப்...

தேர்தலில், பிரதான வேட்பாளர்களில் ஒருவரான சஜித்தை ஆதரிப்பதென ஜனநாயக இடதுசாரி முன்னணி தீர்மானித்துள்ளது. இது தொடர்பான பேச்சுகளின்போதே, தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு ஊடாகத் தீர்வு காணப்படவேண்டும் என்பதை ஜனநாயக இடதுசாரி முன்னணியினர் சஜித்திடம் நிபந்தனையாக விதித்துள்ளனர். அதற்கு சஜித்தும் சம்மதித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று குறுகிய காலப்பகுதிக்குள் அதனை செய்தால்தான் சாத்தியமாக அமையும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடம் கூறினோம். அது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகக் கூறினார் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்துவத்தையும் எடுத்துரைத்தோம். கிராம மட்ட சபைகளை நிறுவும் வியூகம் பற்றியும் சஜித்துடன் கலந்துரையாடினோம் என்றும் ஜயம்பதி விக்கிரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## அநுரவின்...

ஆரம்பமாகவுள்ளது. குறித்த நாளில் மூன்று மாவட்டங்களை மையப்படுத்தி மூன்று பிரதானக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை நகரிலும், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நகரிலும், காலி மாவட்டத்தில் காலி நகரிலும் மூன்று கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனம் எதிர்வரும் 26ஆம் திகதி வெளியிடப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஜனாதிபதி...

பினர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார். கங்காராம விகாரையில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றின் பின்னரே, ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் முடிவை ராஜித அறிவித்தார்.

இதன்போது ஜனாதிபதிக்கும், ராஜித சேனாரத்னவுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது. இவ்வாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டாலும் ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவையே வழங்குவதாக ராஜித அறிவித்தார். அத்துடன், ராஜித சேனாரத்னவின் மகனான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்துர சேனாரத்னவும் ஜனாதிபதிக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## வாடிக்கு...

தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். முன்பகை காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## தருமபுரத்தில்...

யடுத்தே அவை மீட்கப்பட்டுள்ளன. வெடிபொருள்களைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-45-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சிக்காக பெரமுன பாடுபடும்



**கொழும்பு, ஓக 14**

**நாட்டில் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க பாடுபடும் கட்சி யென்பதாலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு எதிராக சூழ்ச்சிகள் அரங்கேறிவருகின்றன.**

அவற்றுக்கெல்லாம் நாம் தளரமாட்டோம் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியிலிருந்து சிலர் வெளியேறக்கூடும் என்பது எமக்குத் தெரியும். ஆனால் பெரும்பாலானோர் செல்வார்கள் என எதிர்பார்க்கவில்லை.

இந்த காட்டிக்கொடுப்பாளர்கள் யாரென்பதை நான் கூறவிரும்பவில்லை. அது மக்களுக்குத் தெரியும். நாட்டில் தேசியவாதம் மற்றும் ஒற்றையாட்சிக்காக முன்னிலையாகும் ஒரே கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி. எனவேதான் அதற்கு எதிராக சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுபக்கம் சென்றிருந்தாலும் மக்கள் மாறவில்லை. வாக்காளர்கள் கட்சியுடன்தான் இருக்கின்றனர்- என்றார். (ச-44)

## தேர்தல் திணைக்கள போலி இணையத்தளம் அமெ.வில் செயற்பாடு

கொழும்பு, ஓக.14

போலி தேர்தல்கள் திணைக்கள இணையத்தளம் அமெரிக்காவிலுள்ள ஒரு கூகுள் சேவரால் இயக்கப்படுகிறது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இணைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த சேவர் அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் உலகின் எப்பாகத்திலிருந்தும் இதனை இயக்கலாம். இந்தப் போலி இணையத்தளத்தை இயக்குபவர் பற்றிய விவரங்கள் கூகுள் நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-6)

## துறைமுகத்தில் தீ விபத்து இழப்பீட்டுக்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக.14

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலில் தீப்பிடித்தமைக்காக கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்திடம் இழப்பீடு பெறுவதற்கு இலங்கைத் துறைமுக அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள் ளது. தீவிபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு கோருவதற்காக கப்பலின் உள்ளூர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை தலைவர் கெய்த் டி பேர்னாட் தெரிவித்துள்ளார். (ச-இ)

## சடலத்தை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.போதனா மருத்துவமனை நோயாளர் விடுதி 34 இல் சுயநினைவற்ற நிலையில் சேர்க்கப்பட்டு 22.11.2022 அன்று இறந்த பெண்ணொருவரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சடலத்தை சட்டரீதியாக அரச செலவில் அடக்கம் செய்வதற்கு அதனை அடையாளம் காட்டக்கூடிய நபர்கள் எதிர்வரும் 14 நாள்களுக்குள் யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவப் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.மருத்துவமனைபிரதிப்பணிப்பாளர் மருத்துவர் யமுனானந்தா அறிவித்துள்ளார். (ச-25)

# மரண அறிவித்தல்



## சுந்தரலிங்கம் பன்னீர்ச்செல்வன்

**(ஆசிரியர் - யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் (92 Batch))**

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 59, மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பன்னீர்செல்வன் (ஆசிரியர் - யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், பழைய மாணவன் - யா/இந்துக்கல்லூரி 92 Batch) கடந்த 12.08.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் இளைய புதல்வனும், திரு.திருமதி ஜெயறஞ்சன் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயறஞ்சினியின் பாசமிகு கணவரும், லினோஷ்றாம், லக்ஷானி, கரிஷ்றாம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி (UK), தமிழ்மாறன் (UK), அமரர் குமுதினி (ஆசிரியர் -UK) சாந்தினி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திவாகர் (Oman), ஜெயமாலினி, றஞ்சித், தேவகுமார், இதயகுமார் (அசோக்), மூர்த்தி (UK), கௌரி (UK), லக்ஸ்மன் (UK) ஆகியோரின் மைத்துனரும், கார்த்திகா திவாகரின் (Oman) அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மாணிக்கம் வைரவர் வீதியில் உள்ள அவரது மனைவி இல்லத்தில் நாளை (15.08.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மண்ணில் 07.09.1973

விண்ணில் 12.08.2024

T.P: 075 318 5628
077 959 1327

தகவல்:
குடும்பத்தினர்

(CS 1128) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org